போர்ட் ஸெய்ண்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

MARCH 6, 1923.

ந. 6.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம௵ மார்ச்௴ 6௳. [விலை, 9 பை.

சென்னைச் சட்டநிரூபண சபையாரின் ஆக்ட்.

ACT OF THE LOCAL LEGISLATURE OF MADRAS.

சென்னைச் சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட ஆக்ட்.

இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 81-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து, சென்னைச் சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1922-ம௵ டிஸெம்பர௴ 14௳ கவர்னரவர்களாலும், 1923-ம௵ ஜனவரி௴ 29௳ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. IV OF 1923.

1923-ம௵த்து 4-வது ஆக்ட்.

AN ACT TO AMEND THE MADRAS PORT TRUST ACT, 1905.

1905-ம௵த்திய சென்னபட்டணத்துப் போர்ட் (ரேவு) ட்ரஸ்ட் ஆக்டைத் திருத்துவதற்கான ஆக்ட்.

சென்னபட்டணம் 1905-ம௵த்து 2-வது ஆக்ட்.

பீடிகை.

1905-ம௵த்திய சென்னபட்டணத்துப் போர்ட் (ரேவு) ட்ரஸ்ட் ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செயவதற்கு இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 80-A பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, சென்னபட்டணத்துப் போர்ட் ட்ரஸ்ட் (திருத்துவதற்கான) 1922-ம௵த்திய ஆக்டென்று சொல்லலாம்.

2. இந்த ஆக்டில், 'பிரதான ஆக்ட்' என்பது - 1905-ம௵த்திய சென்னபட்டணத்துப் போர்ட் (ரேவு) ட்ரஸ்ட் ஆக்டென்று அர்த்தமாகும்.

3. பிரதான ஆக்ட் 2-வது, 3-வது, 4-வது பிரிவுகளை விட்டுவிடவேண்டும்.

5-வது பிரிவில் இரண்டு பகுதிகளைச் சேர்த்துக்கொள்வது.

4. பிரதான ஆகட் 5-வது பிரிவில் (9) குறிப்பிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதிகளைச் சேர்த்துக்கொண்டு, இப்போதிருக்கும் (10) முதல் (12) வரையிலுள்ள பகுதிகளுக்கு (12) முதல் (14) வரையிலுள்ள பகுதிகள் என்று மீண்டும் இலக்கமிடவேண்டும் :—

"(10) 'போர்ட் ட்ரஸ்ட் பத்திரம்' என்பது - இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி வாங்கப்பட்ட யாதொரு கடன் விஷயமாய் போர்டாரால் வெளிவிடப்பட்டிருக்கும் டிபென்சர் என்னும் கடன்பத்திரங்கள், பாண்டுகள் அல்லது ஸ்டாக் ஸெர்டிபிகேட்டுகள் என்று அர்த்தமாகும்.

(11) 'நிர்ணயிக்கப்பட்ட' என்பது - இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளினாலாவது சகாயச் சட்டங்களினாலாவது நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும்."

7 முதல் 17 வரையிலுள்ள பிரிவுகளில் திருத்தம்.

5. பிரதான ஆக்ட் 7 முதல் 17 வரையிலுள்ள பிரிவுகளுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும் :—

போர்டின் அமைப்பு.

"7. அக்கிராசனாதிபதி உட்பட பதினொரு பேருக்குக் குறையாமலும் பதினைந்து பேருக்கு மேற்படாமலும் பிரதேச கவர்ன்மெண்டாரால் பிரசித்தஞ்செய்யப்படக்கூடிய சங்கியையுள்ள ட்ரஸடிகள் போர்டில் இருக்கவேண்டும். ஆனால், அக்கிராசனாதிபதியானவர் பதினான்கு தினத்துக்கு மேற்பட்ட கால அளவுக்கு ரஜாவினமேல் போயிருந்து அவருக்கு பதிலாக வேலை பார்க்க வேறொரு அக்கிராசனாதிபதி நியமிக்கபபடும் பட்சத்தில், அவர் - ட்ரஸ்டியாயிருப்பது நின்றுபோகும் ; மேலும், அவர் - வேலைக்குத் திரும்பிவருவதன்மேல் மறுபடியும் ட்ரஸ்டியாவார்.

ட்ரஸடிகளில் நான்கு பேருக்குக் குறையாமல் இந்தியர்களாகவும் நான்கு பேருக்கு மேற்படாமல் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களாகவும இருக்கவேணடும்.

அக்கிராசனாதிபதியை நேமகஞ்செய்வதும் ட்ரஸ்டிகளைத் தெரிந்தெடுப்பதும் நேமகஞ்செய்யப்படும் ட்ரஸ்டிகளை நியமிப்பதும்.

8. (1) அக்கிராசனாதிபதியைப் பிரதேச கவர்ன்மெண்டார் நியமிக்கவேண்டும். மிகுதியுள்ள ட்ரஸ்டிகளில் நான்கு பேர் சென்னபட்டணம் சேம்பர் ஆவ் காமாஸ் என்னும் வர்த்தக சங்கத்தில் அந்தந்த காலத்திலுள்ள மெம்பர்களாலும், இரண்டு பேர் தென் இந்திய சேம்பர் ஆவ் காமர்ஸ் என்னும் வர்த்தக சங்கத்தில் அந்தந்த காலத்திலுள்ள மெம்பர்களாலும், இரண்டு பேர் சென்னபட்டணம் ட்ரேட்ஸ் அஸோஸியேஷன் என்னும் வியாபாரக்கூட்டத்தில் அந்தந்த காலத்திலுள்ள மெம்பர்களாலும், ஒருவர் தென் இந்தியா ஸ்கின் அண்ட் ஹைட் மெர்ச்செண்ட்ஸ் அஸோஸியேஷன் என்னும் தோல் வியாபாரிகளின் கூட்டம், ஒருவர் சென்னபட்டணம் பீஸ் கூட்ஸ் மெர்ச்செண்ட்ஸ் அஸோஸியேஷன் என்னும் ஜவுளி வியாபாரிகளின் கூட்டம் ஆகிய இவைகளில் அந்தந்த காலத்திலுள்ள மெம்பர்களாலும் தெரிந்தெடுக்கப்படவேண்டும ; அவர்கள் - ஷை வர்த்தக சங்கங்களின் அல்லது வியாபாரக்கூட்டங்களின் விதிகளை அனுசரித்துக் கூட்டப்பட்டதாயுள்ள சம்பந்தப்பட்ட வர்த்தக சங்கம் அல்லது வியாபாரக் கூட்டத்தின் மெம்பர்களின் யாதொரு சபையில் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான எலெக்ஷனானது - குறைந்தது நான்கு இந்தியர்களும் நான்கு பேருக்கு மேற்படாமல் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களும் ஷை போர்டின் மெம்பர்களாயிருக்கும்படிச் செய்யும் நோக்கத்துடன், தெரிந்தெடுக்கப்படும் நபர்களின் யோக்கியதாம்சஙகளை நிர்ணயித்துப் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படக்கூடிய கட்டளைகளுக்குட்பட்டு நடத்தப்படவேண்டும்.

(3) ட்ரஸ்டியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயரைப்பற்றியும், சம்பந்தப்பட்ட வர்த்தக சங்கம் அல்லது வியாபாரக் கூட்டத்தின் அக்கிராசனாதிபதியானவர் விவரக்குறிப்பு எழுதி பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டும்.

(4) போர்டில் மொததத்தில் எத்தனை ட்ரஸ்டிகள் இருக்கவேண்டுமோ அத்தனை ட்ரஸடிகள் இருக்கும்படிச் செய்வதற்கு பின்னும் எவரேனும் ட்ரஸ்டிகள் வேண்டியிருக்கிற பட்சத்திலே, அவர்களைப் பிரதேச கவர்ன்மெண்டார் நியமிக்கவேண்டும்.

ட்ரஸ்டிகளின் பெயர்களைப் பிரசித்தஞ்செய்வது.

9. ட்ரஸ்டிகளாக நியமிக்கப்பட்ட அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் பெயர்களை போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசித்தஞ்செய்யவேண்டும்.

ட்ரஸ்டி உத்தியோகத்துக்கு யோக்கியதைக் குறைவுகள்.

10. (1) யாதொரு நபர்—

(a) ப்ரிடிஷ் குடியாயிராவிட்டாலும் இந்தியாவிலுள்ள யாதொரு சமஸ்தானத்தைச் சேர்ந்த குடியாயிராவிட டாலும்,

(b) ட்ரஸ்டியாயிருப்பதற்கு அவரைத் தகுயற்றதாக்குகிறதென்று பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயபபடுகிற யாதொரு குற்றத்துக்காக குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு காவல் தண்டனை விதிக்கப்பெற்றிருந்து, அந்த தண்டனை மாற்றப்படாமலிருந்தாலும் ரத்து செய்யப்படாமலிருந்தாலும் மன்னிக்கப்படாமலிருந்தாலும்,

(c) கடனிறுக்க வகையில்லாதவராயிருந்து கடனிறுக்க வகையில்லாதவரென்பதற்கு ஸெர்டிபிகேட் பெறுமலிருந்தாலும், கடன் தீர்க்கச் சக்தியற்றவராயிருந்து விடுதலை செய்யப்படாமலிருந்தாலும்,

(d) போர்டாரிடத்தில் யாதொரு உத்தியோகத்திலோ லாபம் கிடைக்கத்தக்க வேலையிலோ இருந்தாலும்,

ஆனால், இந்த யோக்கியதைக் குறைவு அக்கிராசனாதிபதிக்குப் பிரயோகப்படமாட்டாது ; பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதிக்குட்பட்டு, அவர் போர்டாரிடத்தில் 30-வது பிரிவில் குறிப்பிடப்படும் உத்தியோகங்களில் எதையாகிலும் வகிப்பதற்கு அவருக்கு அனுமதி கொடுக்கப்படலாம் ;

(e) போர்டாருடைய உத்தரவின்படி செய்யப்பட்ட யாதொரு வேலையிலாகிலும், போர்டாருடனாவது அவர்களாலாவது அவர்களுக்காகவாவது செய்யப்பட்ட

யாதொரு ஒப்பந்தம் அல்லது அலுவலிலாகிலும் நேராகவோ நேராகவல்லாமல் மற்றப்படியோ யாதொரு பங்கு அல்லது பற்றுள்ளவராயிருந்தாலும்,
அவர் ட்ரஸ்டியாயிருக்கத் தகுதியுள்ளவராகமாட்டார்.

எந்த நபரும்—

(i) போர்டாரோடு ஒப்பந்தம் செய்துகொள்ளும் அல்லது போர்டாராலாகிலும் அவர்களுக்காகவாகிலும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படும் யாதொரு ஜாய்ன்ட் ஸ்டாக் கம்பெனியில் பங்குடையவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(ii) போர்டாரின் காரியங்களுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விளம்பரம் பிரசுரம் செய்யப்படக்கூடிய யாதொரு சமாசார பத்திரிகையில் பங்கு அல்லது பற்றுள்ளவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(iii) போர்டாருக்குக் கொடுத்திருக்கும் யாதொரு கடன் தொகையில் பற்றுள்ளவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(iv) அசையாப்பொருள் சம்பந்தமான யாதொரு குத்தகையிலாவது விற்பனையிலாவது பரிவர்த்தனையிலாவது அதைக் கிரயத்துக்கு வாங்குவதிலாவது அதற்குரிய யாதொரு உடன்படிக்கையிலாவது பங்கு அல்லது பற்றுள்ளவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(v) போர்டார் கொடுத்திருக்கிற யாதொரு லைஸென்ஸிலாவது, போர்டாரைச் சேர்ந்த (docks) டாக்குகளிலுள்ள எந்த ரெயில்வே ஸைடிங்கையாகிலும் மரக்கலங்கள் தங்குகிற யாதொரு இடத்தையாகிலும் முழுவதும் தாமேயாயினும் மற்றவர்களைவிட சிலாக்கியமாகவாயினும் உபயோகிக்க போர்டாரோடு செய்துகொண்ட உடன்படிக்கை மூலமாக அல்லது வேறே விதமாக ஏற்பட்ட யாதொரு சுதந்தரத்திலாவது பங்கு அல்லது பற்றுள்ளவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(vi) தாம் வியாபாரம் செய்கிற யாதொரு சாமானை எந்த ஸர்க்கார் வருஷத்திலாவது இரண்டாயிரம் ரூபாய்க்கு அதிகப்படாத ஒரு விலை மதிப்புக்கு போர்டாருக்கு ஏதோ சில சமயங்களில் விற்பனை செய்வதிலே பங்கு அல்லது பற்றுள்ளவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(vii) 39-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b) அடையாளமிட்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் அலுவல்களில் ஏதாவது 41-A பிரிவின்படி எந்த நபரிடத்தில் விட்டுவிடப்பட்டிருக்குமோ அந்த நபராகவாவது, எந்த பர்ம் என்னும் வர்த்தகக்கூட்டம் அல்லது கம்பெனியிடத்தில் விட்டுவிடப்பட்டிருக்குமோ அந்த வர்த்தகக்கூட்டம் அல்லது கம்பெனியின் மெம்பராகவாவது இருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

ஷை வேலை, ஒப்பந்தம் அல்லது அலுவலில் பங்கு அல்லது பற்றுள்ளவராயிருப்பதாகக் கருதப்படமாட்டார்.

(2) யாதொரு ட்ரஸ்டியானவர்—

(a) மேலே கண்ட காரணங்களில் எதனாலாகிலும் யோக்கியதையற்றவராய் விட்டாலும்,

(b) வேலைபார்க்க மறுத்தாலும் வேலைபார்க்க அசக்தராய்விட்டாலும்,

(c) தொடர்ச்சியாய் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு போர்டாரின் சபைகளுக்கு வராமலிருந்தாலும், முன்னதாகவே போர்டாரின் அனுமதி பெறாமல் போர்டாருடைய சாதாரண சபைகளில் தொடர்ச்சியாய் நடக்கும் ஆறு சபைகளுக்கு வாராமலிருந்தாலும்,

அவர் ட்ரஸ்டியாயிருப்பது நின்றுபோகும்; அதன்மேல், அவருடைய உத்தியோகம் காலியாய்விடும்.

அக்கிராசனாதிபதி, ட்ரஸ்டிகள் ஆகிய இவர்களின் உத்தியோக கால அளவு.

11. அக்கிராசனாதிபதியானவர் பிரதேச கவர்ன்மென்டார் இஷ்டப்படுகிற காலம் வரையில் உத்தியோகம் வகித்திருக்கவேண்டும். மிகுதியுள்ள ட்ரஸ்டிகள் சந்தர்ப்பத்துக்கேற்றபடி தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருஷகாலம் வரையில் உத்தியோகம் வகித்திருக்கவேண்டும்; ஆனால், பிரதேச கவர்ன்மென்டார் யாதொரு ட்ரஸ்டியின் ராஜிநாமாவை எந்தக் காலத்திலாகிலும் அங்கீகரிக்கலாம்.

ட்ரஸ்டிகள் மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது மறுபடியும் நியமிக்கப்படுவதற்காவது தகுதியுள்ளவர்களாயிருப்பது.

12. எந்த நபர் ட்ரஸ்டியாயிருப்பது நின்றுபோகிறதோ அந்த நபர் 10-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதையற்றவராய்விட்டாலொழிய, மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது மறுபடியும் நியமிக்கப்படுவதற்காவது தகுதியுள்ளவராவார்.

தற்செயலாய்க் காலி நேரிட்டால் அக்கிராசனாதிபதியையாவது ட்ரஸ்டியையாவது தெரிந்தெடுப்பது அல்லது நியமிப்பது.

13. 8-வது பிரிவின்படி தெரிந்தெடுக்கப்பட்ட யாதொரு ட்ரஸ்டியின் உத்தியோகத்தில் காலி நேரிடுவதன்மேல், அந்த காலி ஸ்தானமானது அதில நிபந்தனை கண்டிருக்கிற மாதிரியாக சம்பந்தப்பட்ட வர்த்தக சங்கத்தாராலாவது வியாபாரக் கூட்டத்தாராலாவது ஒரு மாதத்துக்குள் பூர்த்திசெய்யப்படவேண்டும். 8-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட அக்கிராசனாதிபதியாவது வேறே யாதொரு ட்ர

ஸ்டியாவது உத்தியோகம் வகிப்பது நின்றுபோனால், பிரதேச கவர்ன்மென்டார் சந்தர்ப்பத்துக்கேற்றபடி அக்கிராசனாதிபதியையாகிலும் ட்ரஸ்டியையாகிலும் நியமிக்கலாம்.''

18-வது பிரிவில் திருத்தம்.

6. பிரதான ஆக்ட் 18-வது பிரிவில், (1) '12-வது அல்லது' என்னும் இலக்கத்தையும் வார்த்தைகளையும் விட்டுவிடவேண்டும்; (2) '15-வது பிரிவின்படி' என்னும் வார்த்தைக்கும் இலக்கத்துக்கும் பர்த்தியாக '8-வது பிரிவின்படியாவது 13-வது பிரிவின்படியாவது' என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும், (3) 'போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்டில் விளம்பரமூலமாய்ப்' என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

21-வது பிரிவில் திருத்தம்.

7. பிரதான ஆக்ட் 21-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற் கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

அக்கிராசனாதிபதிக்கும் பதிலாய் வேலை பார்க்கும் அக்கிராசனாதிபதிக்கும் பிரதிபலன் கொடுப்பது.

"21. அக்கிராசனாதிபதிக்கும் அவர் ரஜாவிலிருக்கும்போது அவருக்கு பதிலாக வேலைபார்க்கும்படி 19-வது பிரிவின்பிரகாரம் நியமிக்கப்பட்ட நபருக்கும் சம்பளமாகவோ ரஜாவர்த்தனையாகவோ இதர வர்த்தனையாகவோ இன்ன பிரதிபலன் கொடுக்கப்படவேண்டுமென்பதைப் பிரதேச கவர்ன்மென்டார் அப்போதைக்கப்போது நிச்சயிக்கலாம்; மேலும், அவர்கள் - இன்ன திட்டங்களின்மேலும், இன்ன நிர்ப்பந்தங்களுக்குட்பட்டும் அப்படிப்பட்ட பிரதிபலன் கொடுக்கத்தக்கதாகுமென்பதையும் நிர்ணயிக்கலாம்."

22-வது பிரிவுக்கு பர்த்தியாக புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

8. பிரதான ஆக்ட் 22-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற் கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

ட்ரஸ்டிகளுக்குக் கொடுக்கப்படத்தக்க கட்டணங்கள்.

"22. அக்கிராசனாதிபதியல்லாத வேறே ட்ரஸ்டிகளுக்கு சபைகளுக்கு வருவதற்காக இன்ன கட்டணம் கொடுக்கப்படவேண்டுமென்பதைப் பிரதேச கவர்ன்மென்டார் அப்போதைக்கப்போது நிச்சயிப்பதும், இன்ன திட்டங்களின்மேலும் இன்ன நிர்ப்பந்தங்களுக்குட்பட்டும் அப்படிப்பட்ட கட்டணம் கொடுக்கத்தக்கதாகுமென்று அவர்கள் நிர்ணயிப்பதும் சட்டசம்மதமாகும்."

23-வது பிரிவில் திருத்தம்.

9. பிரதான ஆக்ட் 23-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவை விட்டுவிட்டு, மற்ற உட்பிரிவுகளுக்கு மீண்டும் இலக்கமிடவேண்டும்.

23-வது பிரிவுக்குப் பிறகு புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

10. பிரதான ஆக்ட் 23-வது பிரிவுக்குப் பிறகு அடியிற் கண்டதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

ட்ரஸ்டிகளுக்குப் பற்றுள்ள விஷயங்களில் வோட் கொடுக்கவாவது வாதம் செய்யவாவது அவர்களுக்குள்ள அதிகாரத்தைப்பற்றிய வரையறை.

"23-A. போர்டாரின் அல்லது யாதொரு கம்மிட்டியின் சபையில் ஆலோசனைக்கு வரும் யாதொரு விஷயமானது யாதொரு ட்ரஸ்டி தாமாகவேயாகிலும் தம்முடைய பாகஸ்தர் மூலமாகவாகிலும் நேராகவோ அல்லது நேராகவல்லாமல் மற்றப்படியோ திரவியசம்பந்தமாய்ப் பற்றுள்ளவராயிருக்கிற விஷயமாக இருந்தாலும், தொழில் முறையில் யாதொரு கட்சிக்காரர் சார்பிலாவது கவர்ன்மென்டார், யாதொரு பிரதேச அதிகாரசபை அல்லது யாதொரு ரெயில்வே கம்பெனி அல்லாத வேறே யாதொரு நபரின் ஏஜென்டாகவாவது தாம் பற்றுள்ளவராயிருக்கிற விஷயமாக இருந்தாலும், அவர் - அந்த விஷயத்தைப்பற்றி வாதம் நடக்கும்போது வோட் கொடுக்கவுங்கூடாது, அந்த வாதத்தில் கலந்துகொள்ளவுங்கூடாது."

27-வது பிரிவில் திருத்தம்.

11. பிரதான ஆக்ட் 27-வது பிரிவில் 'அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களுள் அக்கிராசனாதிபதியல்லாத வேறே உத்தியோகஸ்தர்களும் அப்படிப்பட்ட' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

28-வது பிரிவில் திருத்தம்.

12. பிரதான ஆக்ட் 28-வது பிரிவில்,—

(1) கடைசி வாக்கியத்தில் 'ரெகுலேஷன்களேற்படுத்தவேண்டும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாம்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(2) (5) குறிப்பிட்ட உட்பிரிவில், 'பாத்தியதையுடையவரர்வார்களென்பதையும்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'பாத்தியதையுடையவர்களாகலாமென்பதையும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(3) (7) குறிப்பிட்ட உட்பிரிவில், 'தங்களுடைய அலுவலைச் செய்துகொண்டிருக்கையிலே' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'போர்டாரைச் சேர்ந்த ஊழியத்தி

விருக்கையிலே' என்னும் வார்த்தைகளையும், 'அந்தப்படி அலுவலைச் செய்துகொண்டிருக்கையிலே கொல்லப்பட்டவருக்குப்பின்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'அந்தப்படி ஊழியத்திலிருக்கையிலே மரணமடைந்தவருக்குப்பின்' என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

28-வது பிரிவுக்குப் பிறகு புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

13. பிரதான ஆக்ட் 28-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

சிற்ப வேலைக்காரர்கள், போர்ட்டர்கள் முதலியவர்களுக்காக ரெகுலேஷன்கள் ஏற்படுத்த அதிகாரம்.

"28-A. 27-வது, 28-வது பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதிக்குட்பட்டு, போர்டார் - சிற்பவேலைக்காரர்கள், போர்ட்டர்கள், வேலையாள்கள் ஆகிய இவர்களின் பிரயோசனத்துக்காகவும், போர்ட்டர்களையும் வேலையாள்களையும் சர்ப்பரா செய்கிறவர்களின் பிரயோசனத்துக்காகவும் 28-வது பிரிவைச் சேர்ந்த (5) முதல் (7) வரையிலுள்ள பகுதிகளில் கண்ட தன்மையான ரெகுலேஷன்கள் (திட்டங்கள்) ஏற்படுத்தலாம் ; மேலும், 94-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அப்படிப்பட்ட யாதொரு ரெகுலேஷன்படி கொடுக்கப்படத்தக்க சகல பென்ஷன்களும் சகாயத் தொகைகளும் வர்த்தனைகளும், அதே தன்மையுடையவைகளாய் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கும் எவையேனும் தொகைகளும் போர்டாரின் பொது நிதியிலிருந்து செய்யப்படத்தக்க செலவுகளாகும்."

30-வது பிரிவில் திருத்தம்.

14. பிரதான ஆக்ட் 30-வது பிரிவில் 'சீவ் அகௌன்டென்டுக்காகிலும்' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு 'ரேவின் டெப்யுடி கான்ஸர்வேடருக்காகிலும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

36-வது பிரிவில் திருத்தம்.

15. பிரதான ஆக்ட் 36-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

"(2) பிரயாணிகளுக்காகவும் சரக்குகளுக்காகவும் ரெயில்வேக்கள்-ட்ராம்வேக்கள் - (லோகொமோடிவ்) என்ஜின்கள் - ஓடும் வண்டிகள் - கொட்டகைகள் - சாமான் கிடங்குகள் முதலிய வசதியிடமும், பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போவதற்கும் இறக்கப்பட்டாவது கப்பலில் ஏற்றப்படவேண்டியாவது மற்றப்படியாவது இருக்கிற சரகுகளைக் கொண்டு போவதற்கும் வரப்பெற்றுக்கொள்வதற்கும் சேர்த்துவைப்பதற்கும் வேண்டிய இதர உபகாரணங்களும்."

39 முதல் 41 வரையிலுள்ள பிரிவுகளுக்கு பர்த்தியாக புதிய பிரிவுகளை அமைத்துக்கொள்வது.

16. பிரதான ஆக்ட் 39 முதல் 41 வரையிலுள்ள பிரிவுகளுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

போர்டார் ஊழியங்கள் செய்வது.

"39. (1) போர்டார் தங்களுக்குடைய அதிகாரங்களை அனுசரித்து அடியிற்கண்ட ஊழியங்களுக்காக நியாயமான சகல சௌகரியங்களையும் ஏற்படுத்திக்கொடுப்பது மாத்திரமல்லாமல், அந்த ஊழியங்களைச் செய்ய ஏற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு :—

(a) ரேவிலுள்ள மரக்கலங்களுக்கும் போர்டாருடைய சுவாதீனத்திலிருக்கிற ஏற்றிறக்குமதிச் செய்கரைகள் - சமுத்திர வாராவதிகள் - மேடைவழிகள் அல்லது டாக்குகளுக்கும் மத்தியிலே பிரயாணிகளையும் சரக்குகளையும் கரையில் இறக்குவது, கப்பலில் ஏற்றுவது, அல்லது ஒரு கப்பலிலிருந்து வேறொரு கப்பலுக்குக் கொண்டுபோவது ;

(b) போர்டாருடைய வளவுக்குள் கொண்டுவரப்பட்ட சரக்குகளை வரப்பற்றிக் கொள்ளுவது, அப்புறப்படுத்துவது, இன்னொரிடத்துக்கு மாற்றுவது, கொண்டுபோவது, சேர்த்துவைப்பது அல்லது ஒப்பிப்பது ;

(c) என்ன நிர்ப்பந்தங்களையும் திட்டங்களையும் விதிப்பது தகுதியென்று பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தோற்றக்கூடுமோ அந்த நிர்ப்பந்தங்களுக்கும் திட்டங்களுக்கும் உட்பட்டு ரேவின் எல்லைகளுக்குள்ளே பிரயாணிகளை ரெயில் மூலமாகவாவது ட்ராம்வே மூலமாகவாவது மற்றப்படியாவது ஏற்றிக்கொண்டுபோவது ;

(d) ரேவிலுள்ள மரக்கலங்களிலிருந்து சமீபத்திலுள்ள ரெயில்வேக்கள் மூலமாக கொண்டுபோக உத்தேசிக்கப்பட்டிருக்கிற அல்லது சமீபத்திலுள்ள ரெயில்வேக்கள் மூலமாக ரேவிலுள்ள மரக்கலங்களுக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருக்கிற சரக்குகளை, 1890-ம் ௵த்திய இந்துதேசத்து ரெயில்வே ஆக்டின்படிக்கான யாதொரு ரெயில்வே கம்பெனியைப்போலவாவது பரிபாலகர்களைப்போலவாவது வரப்பெற்றுக்கொள்வதும், ஒப்புவிப்பதும், அவைகளைக் கொண்டுபோவதும் புஸ்தகங்களில் பதிந்துகொண்டு ரசீது கொடுப்பதும் அனுப்புவதும்.

(2) யாதொரு சொந்தக்காரர் கேட்டுக்கொள்ளும்பட்சத்திலே போர்டார் - சரக்குகளின் விஷயத்தில், (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b), (d) அடையாளமிட்ட பகுதிகளில் சொல்லியிருக்கும் சகல ஊழியங்களையுமாவது அவைகளில் எதையாவது செய்யவேண்டும்; ஆனால், 41-A பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a) அடையாளமிட்ட பகுதியில் கண்டிருக்கிற நிபந்தனைகளின்படி தாங்கள் விட்டுவிட்டிருக்கும் எந்த ஊழியத்தையாகிலும் செய்ய போர்டார் கடமைபட்டவர்களாகமாட்டார்கள்.

(3) கேட்டுக்கொள்ளப்படுகிற பட்சத்திலே, போர்டார் - ஷை ஊழியத்தைச் செய்யும் காரியத்துக்காக சரக்குகளைத் தங்கள் வசத்தில் பெற்றுக்கொண்டு, பிரதேச கவர்ன்மென்டாரால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும் நமூனாப்படியும் பொருள்படும்படியாகவும் ரசீது கொடுக்கவேண்டும்.

இந்தப் பிரிவின்படி எவையேனும் சரக்குகள் (போர்டாரின்) வசத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அவைகளுக்காக ரசீது கொடுக்கப்பட்டான பிறகு, அவைகளுக்கு நேரிடக்கூடிய யாதொரு நஷ்டம் அல்லது சேதத்தின் விஷயமாய், எந்த நபருக்கு ரசீது கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபருக்காகிலும் எந்த மரக்கலத்திலிருந்து ஷை சரக்குகள் கரையில் இறக்கப்பட்டிருக்கின்றனவோ அல்லது எந்த மரக்கலத்திலிருந்து அவை இன்னொரு மரக்கலத்தில் ஏற்றப்பட்டிருக்கின்றனவோ அந்த மரக்கலத்தின் மாஸ்டர் அல்லது சொந்தக்காரருக்காகிலும் பொறுப்பு எதுவும் ஏற்படமாட்டாது.

சரக்குகளுக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் முதலியவைகள் விஷயமாய் போர்டாரின் உத்தரவாதம்.

40. (1) தங்களுடைய வசத்தில் பெற்றுக்கொண்டிருக்கிற சரக்குகள் நஷ்டப்படுவது அல்லது சேதப்படுவது அல்லது கெட்டுப்போவது சம்பந்தமாய் போர்டாருக்குள்ள உத்தரவாதமானது - இந்த ஆக்டிற்கண்ட இதர நிபந்தனைகளுக்குட்பட்டும், ரெயில் மூலமாய்க் கொண்டு போவதற்காக வரப்பற்றிக்கொள்ளப்பட்ட சரக்குகளின் விஷயத்திலே 1890-ம் ௵த்திய இந்துதேசத்து ரெயில்வே ஆக்டில் கண்ட நிபந்தனைகளுக்கும் உட்பட்டும், 1872-ம் ௵த்திய இந்துதேசத்து கான்ட்ராக்ட் ஆக்ட் 152-வது பிரிவிலே 'யாதொரு பிரத்தியேகமான கான்ட்ராக்ட் இல்லாவிட்டால்' என்னும் வார்த்தைகளை விட்டுவிட்டு கடைசியாகச் சொன்ன மேற்படி ஆக்ட் 151, 152, 161-வது பிரிவுகளின்படி ஒரு (பெய்லீக்குள்ள) ஒப்படை வாங்குகிறவருக்குள்ள உத்தரவாதமாகும். ஆனால், 39-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் ரசீது போர்டாரால் கொடுக்கப்படுகிறவரையில், சரக்குகள் சொந்தக்காரரின் பொறுப்புக்கு உட்பட்டவையாக இருக்கும்.

(2) போர்டார் தங்களுடைய வசத்தில் பெற்றுக்கொண்டிருக்கும் சரக்குகளுக்கு நஷ்டம் அல்லது சேதம் ஏற்படும்பட்சத்தில், அந்த நஷ்டத்தைப்பற்றி 39-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சரக்குகளுக்காகக் கொடுக்கப்பட்ட ரசீதின் தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் நோடிஸ் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, அவர்கள் - ஷை நஷ்டம் அல்லது சேதத்துக்கு எவ்விதத்திலும் உத்தரவாதிகளாகமாட்டார்கள்.

ஊழியங்கள் போர்டாரால் எந்த நபர்களிடத்தில் விட்டுவிடப்பட்டிருக்கின்றனவோ அந்த நபர்கள் ஊழியங்களைச் செய்வது.

41. (1) 39-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b) அடையாளமிட்ட பகுதிகளின்படிக்கான எந்தஊழியமாவது சகல ஊழியங்களாவது 41-A பிரிவின்படி எந்த நபரிடத்தில் விட்டுவிடப்பட்டிருக்கிறதோ அல்லது விட்டுவிடப்பட்டிருக்கின்றனவோ அப்படிப்பட்ட யாதொரு நபர் - சொந்தக்காரர் கேட்டுக்கொள்ளும் பட்சத்திலே, சரக்குகளின் விஷயத்தில் அந்தப்படி விட்டுவிட்டிருக்கும் ஊழியங்களில் எதையாகிலும் செய்யவேண்டும்; மேலும், அவர் - அது காரியத்துக்காக ஷை சரக்குகளைத் தம் வசத்தில் பெற்றுக்கொண்டு, பிரதேச கவர்ன்மென்டாரால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும் நமூனாப்படியும் பொருள்படும்படியாகவும் ரசீது கொடுக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு நபருக்கு அவர் தம் வசத்தில் பெற்றுக்கொண்டிருக்கும் சரக்குகள் நஷ்டப்படுவது சேதப்படுவது அல்லது கெட்டுப்போவது விஷயமாய் ஏற்படும் உத்தரவாதமானது - இந்த ஆக்டிற்கண்ட இதர நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 1872-ம் ௵த்திய இந்து தேசத்து கான்ட்ராக்ட் ஆக்ட் 151, 152, 161-வது பிரிவுகளின்படி யாதொரு ஒப்படை வாங்குகிறவருக்குள்ள உத்தரவாதமாகும்.

பிரதேச கவர்ன்மென்டாரின் மேல்விசாரணைக்குட்பட்டு ஊழியங்களை விட்டுவிடுவது.

41-A. (1) பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதி பெறுவதற்கும் பிரதேச கவர்ன்மென்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களுக்கும் உட்பட்டு, போர்டார்—

(a) 39-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b) அடையாளமிட்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழியங்களில் எதையாகிலும் செய்யும் விஷயத்தை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நபரிடத்தில் விட்டுவிட்டு உடன்படிக்கை செய்து கொள்ளலாம்; அல்லது,

(b) 40-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவினால் போர்டாருக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பைக்காட்டிலும் அதிகமான அல்லது குறைவான பொறுப்பை ஏற்றுக்கொண்டு உடன்படிக்கை செய்துகொள்ளலாம்.

(2) இந்தப் பிரிவின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு உடன்படிக்கையும் எழுத்துமூலமாய் இருக்கவேண்டியதுமல்லாமல், அதில் சம்பந்தப்பட்ட நபர்களாவது அவர்களுக்காக வேறே எவராவது கையெழுத்து போடவும் வேண்டும்.

(3) 39-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a) அல்லது (b) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் யாதொரு ஊழியத்தைச் செய்யும் காரியம் தம்மிடத்தில் விடப்பட்டிருக்கும் எந்த நபரும் - அந்த ஊழியம் போர்டாரால் செய்யப்பட்டிருந்தால் 42-வது பிரிவின்படியாவது 43-வது பிரிவின்படியாவது 43-A பிரிவின்படியாவது ஏற்படுத்தப்பட்ட வீத நிர்ணயத்தின் பிரகாரம் விதித்து வாங்கப்படத்தக்க தொகைக்கு அதிகமாய் எந்தத் தொகையாகிலும் அப்படிப்பட்ட ஊழியத்துக்காக விதிக்கவுங்கூடாது, வசூலிக்கவுங்கூடாது.

(4) அந்தப்படி விட்டுவிடப்பட்டிருந்தும் பாதகமில்லாமலே, போர்டார் - தங்களுடைய கட்டுவேலைகளையாவது உபகரணங்களையாவது உபயோகிப்பதற்காகவாகிலும், விட்டுவிடப்பட்டிருக்கும் ஊழியத்தோடு சம்பந்தப்பட்ட இதர ஊழியங்களுக்காகவாகிலும் 42-வது, 43-வது பிரிவுகளிலும் 43-A பிரிவிலும் ஏற்படுத்தியிருக்கும் வீத நிர்ணயங்களின்படி கட்டணங்கள் விதித்து வாங்குவதனால் 40-வது பிரிவின்படி எவ்வித பொறுப்பும் ஏற்றுக்கொள்ளாமலே அந்தக் கட்டணங்கள் விதித்துவாங்கலாம்."

42-வது பிரிவில் திருத்தம்.

17. பிரதான ஆக்ட் 42-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

வரி வீதங்களின் நிர்ணயம்.

"42. போர்டார் - இதன்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழியங்களில் எதுவாகிலும் என்ன வீதவரிகளின்படியும் என்ன திட்டங்களின்படியும் தங்களாலாவது 41-A பிரிவின்படி யாதொரு ஊழியம் தம்மிடத்தில் விட்டுவிடப் பெற்றிருக்கும் யாதொரு நபராலாவது சிறிதுமட்டில் தங்களாலும் சிறிதுமட்டில அந்த நபராலுமாவது செய்யப்படவேண்டுமோ அந்த வீதவரிகள் கண்டுள்ள ஒரு வீத நிர்ணயத்தையும் அந்த திட்டங்கள் கண்டெழுதியிருக்கும் ஒரு ஸ்டேட்மென்டையும் தயார் செய்யவேண்டும் :—

(a) ஹார்பரிலுள்ள மரக்கலங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் பிரயாணிகளையாவது சரக்குகளையாவது ஏற்றுவது ;

(b) பிரயாணிகளையாவது சரக்குகளையாவது ஷெ. மரக்கலங்களிருந்தாகிலும் அவைகளிலாகிலும், போர்டாரின் சுவாதீனத்திலாயினும் அனுபோகத்திலாயினுமிருக்கிற யாதொரு ஏற்றிறக்குமதிக்கான செய்கரை - மேடைவழி - சமுத்திரவாராவதி - டாக் - நிலம் அல்லது கட்டிடத்திலாகிலும் அதிலிருந்தாகிலும் ரேவின் எல்லைகளுக்குள் இருக்கும் யாதொரு இடத்திலாகிலும் இறக்குவதும் ஏற்றுவதும் ;

(c) அப்படிப்பட்ட யாதொரு இடத்தில் சரக்குகளை க்ரேன் என்னும் கருவியால் தூக்குவது அல்லது ஆள்கள் மூலமாய்க் கொண்டுபோவது ;

(d) அப்படிப்பட்ட யாதொரு இடத்திலே சரக்குகளைச் செய்கரையில் ஏற்றிறக்குமதி பண்ணுவது, கிடங்கில் சேர்த்துவைப்பது அல்லது நிர்ணயகாலத்துக்குமேற்பட்டு அப்புறப்படுத்தாமல் வைத்துவைப்பது

(e) மரக்கலங்கள், பிரயாணிகள் அல்லது சரக்குகளின் விஷயத்தில் செய்யப்படும் வேறே யாதொரு ஊழியம்."

43-வது பிரிவில் திருத்தம்.

18. பிரதான ஆக்ட் 43-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

போர்டாருக்குச் சொந்தமாயிருக்கும் சொத்தை உபயோகிப்பதற்காக வீத வரிகளின் நிர்ணயமும் திட்டங்களைக்குறித்த ஸ்டேட்மென்டும்.

"43. போர்டாருக்குச் சொந்தமாயிருக்கிற அல்லது அவர்களுடைய சுவாதீனத்திலாவது அனுபோகத்திலாவது இருக்கிற யாதொரு சொத்தையாகிலும் ரேவின் எல்லைகளுக்குள் இருக்கிற யாதொரு இடத்தையாகிலும் இதில் பின்னால் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்களுக்காக எந்த வீதவரிகளைச் செலுத்துவதன் மேலும், எந்த திட்டங்களின்படியும் உபயோகிக்கலாமோ அந்த வீத வரிகள் கண்டுள்ள ஒரு வீத வரி நிர்ணயத்தையும் அந்த திட்டங்கள் கண்டெழுதியிருக்கும் ஒரு ஸ்டேட்மென்டையுங்கூட போர்டார் தயார் செய்யவேண்டும் :—

(a) மரக்கலங்களாவது படகுகளாவது மேலேகண்ட எவையேனும் நங்கூரம் போடும் இடங்கள், ஏற்றிறக்குமதிக்கான செய்கரை, மேடைவழி, சமுத்திரவாராவதி, டாக், நிலம் கட்டிடங்கள் அல்லது இடங்களை, நெருங்கிப்போவது அல்லது ஷெ. இடங்கள் முதலியவைகளிலாகிலும் அவற்றின் ஓரத்தில் நெடுகவாகிலும் தங்கியிருப்பது ;

(b) பிரயாணிகளையாவது சரக்குகளையாவது ஏற்றிக்கொண்டுபோகும் பிராணிகளாகிலும் வண்டிகளாகிலும் மேலேகண்ட யாதொரு ஏற்றிறக்குமதிக்கான செய்கரை, மேடைவழி, சமுத்திரவாராவதி, டாக், நிலம், கட்டிடம் அல்லது இடத்திலாயினும் அதன் மேலாயினும் பிரவேசிப்பது அல்லது வாடகைக்கு ஓடுவது ;

(c) இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஏற்றுமதி செய்ய உத்தேசிக்கப்பட்ட சரக்குகளின் சொந்தக்காரர்களாவது ஸ்டீமர் ஏஜெண்டுகளாவது நிலத்தையாகிலும் கொட்டகைகளையாகிலும் குத்தகைக்கு எடுத்துக்கொள்வது ;

(d) போர்டாருக்குச் சொந்தமாயிருக்கிற அல்லது அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற எந்த நிலம், கட்டுவேலைகள் அல்லது உபகரணங்களையாகிலும் வேறே எவ்விதமாகவேனும் உபயோகிப்பது.

ஊழியங்களை ஒன்றாய்க் கூட்டிச் செய்வதற்காக ஒன்றாய்ச் சேர்க்கப்பட்ட வீதங்கள்.

43-A. 42-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழியங்களை எவ்விதமாகவாகிலும் கூட்டிச்செய்வதற்காகவாவது, அப்படிப்பட்ட ஊழியம் அல்லது ஊழியங்களுடன்கூட 43-வது பிரிவில் குறிப்பிடப்பட்டபடி போர்டாருக்குச் சொந்தமாகவாயினும் அவர்களுடைய சுவாதீனத்திலாயினும் அனுபோகத்திலாயினும் இருக்கும் யாதொரு சொத்தை எவ்விதமாகவேனும் உபயோகித்துக்கொள்வதையோ உபயோகித்துக்கொள்வதற்கான அனுமதியையோ எப்போதாகிலும் சேர்த்துக்கொண்டால் அதற்காகவாவது ஒன்றாய்ச் சேர்க்கப்பட்ட வீதங்களை நிர்ணயிக்கலாம்.''

44-A பிரிவில் திருத்தம்.

19. பிரதான ஆக்ட் 44-A பிரிவில்—

(1) 'இறக்குமதிக்காகவானால் ஹார்பரில் இறக்கப்பட்டோ ஏற்றுமதிக்காகவானால் ஹார்பர் வளவுக்குள் விடப்பட்டோவுள்ள பிராணிகள் அல்லது சரக்குகளின் விஷயமாய்' என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

(2) 'போர்ட் ட்ரஸ்டாரிடத்தில்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'போர்டாரிடத்தில்' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

48-வது பிரிவில் திருத்தம்.

20. பிரதான ஆக்ட் 48 - வது பிரிவில் 'நேரஸ்தனிடத்திலிருந்து' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'நபரிடத்திலிருந்து' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

51-வது பிரிவில் திருத்தம்.

21. பிரதான ஆக்ட் 51-வது பிரிவில், 'சகல வீத வரித்தொகைக்காவும்' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "எவையேனும் கட்டிடங்கள், (கட்டிடங்களின்) அடிப் பரப்புகள், (சரக்குகளை) அடுக்கி வைப்பதற்கான விஸ்தீர்ணங்கள் அல்லது இதர வளவுகளின் மேலாவது அவைகளிலாவது எந்த சரக்குகளாகிலும் வைக்கப்பட்டிருக்கக்கூடுமானால் அந்த கட்டிடங்கள் முதலியவை விஷயமாய் போர்டாருக்குச் சேரவேண்டிய வாடகைக்காகவும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

52-வது பிரிவில் திருத்தம்.

22. பிரதான ஆக்ட் 52-வது பிரிவில், 'அப்படிப்பட்ட வீத வரிகளினிமித்தமுள்ள பாத்தியதையானது' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'அப்படிப்பட்ட பாத்தியதையானது' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

56-வது பிரிவில் திருத்தம்.

23. பிரதான ஆக்ட் 56-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

வீதவரிகள் அல்லது வாடகை செலுத்தப்படாமலிருந்தாலும் கேழ்வுக்காகவுள்ள பாத்தியதை அற்றுப்போகாமலிருந்தாலும் இரண்டு மாதம் கழிந்த பின்பு சரக்குகளை விற்பனை செய்வது.

"56. (a) எவையேனும் சரக்குகள் விஷயமாய் போர்டாருக்குச் செலுத்தப்படத்தக்க வீத வரிகள் எதுவாகிலும் செலுத்தப்படாமலிருந்தாலும், (b) ஷை சரக்குகள் எந்த இடத்தின்மேலோ இடத்திலோ சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றனவோ அப்படிப்பட்ட யாதொரு இடத்தின் விஷயமாய் 51-வது பிரிவில் கண்டிருக்கும் யாதொரு வாடகை செலுத்தப்படாமலிருந்தாலும், (c) கப்பற் கேழ்வு அல்லது வேறே கட்டணங்களின் நிமித்தம் யாதொரு கப்பலின் சொந்தக்காரருக்குள்ள எந்த பாத்தியதையைப்பற்றியாகிலும் அறிக்கை செய்யப்பட்டிருந்தும் சரிச் சொல்லப்படாமலிருந்து அந்தக் கப்பற்கேழ்வு அல்லது இதர கட்டணங்களின் நிமித்தம் அப்படிப்பட்ட பாத்தியதை உண்டென்று சொல்லுகிற நபர் விற்பனை செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டிருந்தாலும், அந்த சரக்குகள் போர்டாரின் வசத்தில் வந்த காலமுதல் இரண்டு மாதம் கழிந்த பிறகாவது, அழிந்துபோகத்தக்க சரக்குகளாயிருந்தால் 24 மணி நேரத்துக்குக் குறையாமல் போர்டாருக்குத் தகுதியாகத் தோற்றும் இன்னும் குறைவான கால அளவு கழிந்த பிறகாவது, அந்த சரக்குகளில் அவசியமாயுள்ள பாகத்தை பஹிரங்கமான ஏல மூலமாய் விற்பனை செய்ய போர்டாருக்கு அதிகாரமுண்டு."

7-ம் அத்தியாயத்தின் தலைப்பில் திருத்தம்.

24. பிரதான ஆக்ட் 7-ம் அத்தியாயத்தின் தலைப்பிலுள்ள 'கடன்களைக்குறித்து' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, 'கடன்வாங்க போர்டாருக்குள்ள அதிகாரங்களைக்குறித்து' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

63, 64-வது பிரிவுகளுக்கு பர்த்தியாக புதிய பிரிவுகளை அமைத்துக்கொள்வது.

25. பிரதான ஆக்ட் 63, 64-வது பிரிவுகளுக்கு பர்த்தியாக அடியிற்கண்டவைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

கடன் வாங்க அதிகாரம்.

"63. (1) போர்டார் - பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியையும் ஐந்து லக்ஷ ரூபாய்க்குக் குறையாத கடன் தொகையின் விஷயத்திலே ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியையும் முன்னதாகப் பெற்றுக்கொண்டும், போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் கிரமமாய் விளம்பரம் பிரசுரித்த பிறகும் இந்த ஆக்டின் காரியங்களுக்காகக் கடன் வாங்கலாம்.

(2) கடன் தொகைகளை, பஹிரங்கமாய்க் கடன் கொடுப்பவர்களிடமிருந்து போர்ட் டிரஸ்ட் பத்திரங்களின்பேரில் வாங்கலாம், அல்லது பிரதேச கவர்ன்மெண்டாரிடமிருந்தாவது இந்தியா கவர்ன்மெண்டாரிடமிருந்தாவது பெற்றுக்கொள்ளலாம். சகல கடன்களைக்குறித்த ஷரத்துகளும் ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அங்கீகாரத்துக்கு உட்பட்டவைகளாகும்.

போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்கள்.

64. (1) பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு போர்டார் - போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்கள் இன்ன நமூனைப்படி வெளிவிடப்படவேண்டுமென்பதையும், இன்ன மாதிரியாகவும் இன்ன திட்டங்களுக்குட்பட்டும் அவை ட்ரான்ஸ்பர் செய்யப்படலாமென்பதையும் நிர்ணயிக்கலாம்.

(2) போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்கள் மூலமாய்க் கிடைத்திருக்கும் பணத்தொகைகள் விஷயமாக வியாஜ்ஜியம் தொடருவதற்குள்ள சுதந்தரமானது - அந்தப் பத்திரங்களில் சில மற்றவைகளைக்காட்டிலும் முன்னிட்ட தேதியுள்ளவைகளென்கிற காரணத்தினாலே சிலாக்கியம் பெறாமல், அந்தந்த காலத்தில் அவைகளை வைத்துக்கொண்டிருப்பவர்களால் கொண்டாடப்படத்தக்கதாகும்.

[1920-ம் ஞூத்து 10-வது ஆக்ட்]

இந்துதேசத்துப் பத்திரங்களாக்ட் போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களுக்குப் பிரயோகப்படத்தக்கதாகுமென்பது.

64-A. 1920-ம்ஞூத்திய இந்துதேசத்துப் பத்திரங்களாக்ட் 4, 5, 8, 9, 10, 15-வது பிரிவுகளில் கண்டிருக்கும் நிபந்தனைகள் - போர்டாரால் வெளிவிடப்படும் சகல பத்திரங்களுக்கும் அவசியமான மாறுதல்களுடன் பிரயோகப்படும்.

விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

64-B. (1) போர்டார் - அடியிற்கண்ட சகல விஷயங்களுக்காகவாவது அவைகளில் எதற்காவது நிபந்தனை ஏற்படுத்தும்பொருட்டு அப்போதைக்கப்போது விதிகள் செய்யலாம்; அந்த விஷயங்கள் எவையென்றால் :—

(a) போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களில் கையெழுத்து போட அதிகாரம் கொடுக்கப்பெற்ற நபர் எவராகிலும் இருந்தால் அவர் இன்னாரென்பதும், போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களுக்குச் சம்பந்தப்பட்ட தஸ்தவேஜுகளில் கார்பொரேட் ஸீல் (சட்டப்படி ஏற்பட்டதென்பதைக் காட்டும் முத்திரை) இன்னவிதமாய் அழுத்தப்படவேண்டுமென்பதும் இன்ன விதமாய் அத்தாட்சிக்கையெழுத்து போடப்படவேண்டுமென்பதும்;

(b) போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களுக்கு வட்டி இன்ன மாதிரியாகக் கொடுக்கவேண்டுமென்பதும், வட்டி கொடுப்பதை இன்ன மாதிரியாய் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பதும்;

(c) இன்ன சந்தர்ப்பங்களிலும் இன்ன மாதிரியாகவும் போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்கள் புதுப்பிக்கப்படலாமென்பது;

(d) அப்படிப்பட்ட பத்திரங்களுக்காகப் பின்னும் வட்டி கொடுக்கும்படி கேட்பதற்குமுன் இன்ன சந்தர்ப்பங்களில் அவை புதுப்பிக்கப்படவேண்டுமென்பது;

(e) புதுப்பிக்கப்படுவதற்கும் மாற்றப்படுவதற்கும் ஒப்பிக்கப்படுகிற பத்திரங்களில் இன்ன நமூனைப்படி ரசீது எழுதவேண்டுமென்பது;

(f) இரண்டாம் பிரதியான பத்திரங்களுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளும் நபர்கள் இன்ன ருஜு காட்டவேண்டுமென்பது;

(g) போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களுக்குப் பிரயோகப்படுத்தப்பட்டபடி, 1920-ம் ஞூத்திய இந்துதேசத்துப் பத்திரங்களாக்ட் 10-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் விளம்பரத்தை, இன்ன நமூனைப்படியும் இன்ன மாதிரி

யாகவும் பிரசித்தம் செய்யவேண்டுமென்பதும், அந்தப் பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் ஜாபிதாவை இன்ன மாதிரியாய்ப் பிரசித்தம் செய்யவேண்டுமென்பதும்;

(h) முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது தொலைந்துபோய்விட்டதென்றாகிலும் அழிந்துபோய்விட்டதென்றாகிலும் சொல்லப்படும் டிபென்சர் என்னும் கடன்பத்திரங்களுக்கு வட்டி கொடுக்கப்படவேண்டுமென்றோ இரண்டாம் பிரதியான டிபென்சர் என்னும் கடன்பத்திரங்கள் பிறப்பிக்கப்படவேண்டுமென்றோ விண்ணப்பம் செய்துகொள்ளும் யாதொரு நபர் அதனால் பாதகம் உண்டாகாதபடி இன்ன வகையாகவும் இவ்வளவு தொகைக்கும் பாதுகாப்பு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்பது;

(i) இன்ன திட்டங்களுக்குட்பட்டு போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களை மாற்றிக்கொள்ளலாமென்பது;

(j) இன்ன தொகைகளுக்கு ஸ்டாக் ஸெர்டிபிகேட்டுகள் பிறப்பிக்கப்படலாமென்பது;

(k) பொதுவாய் இரண்டாம் பிரதியான பத்திரங்களையும் புதுப்பிக்கப்பட்ட பத்திரங்களையும் மாற்றப்பட்ட பத்திரங்களையும் கொடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களும்;

(l) இரண்டாம் பிரதியான பத்திரங்களைப் பிறப்பிப்பது விஷயமாகவும் போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களைப் புதுப்பிப்பது விஷயமாகவும் மாற்றுவது விஷயமாகவும் இன்ன கட்டணங்கள் செலுத்தப்படவேண்டுமென்பது;

(m) ஸ்டாக் ஸெர்டிபிகேட்டுகளைப் பிறப்பிப்பது விஷயமாய் இன்ன கட்டணங்கள் விதித்து வாங்கப்படவேண்டுமென்பது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விதிகள் செய்வதற்கான அதிகாரமானது அடியிற்கண்ட திட்டங்களுக்கு உட்பட்டதாகும்:—

(1) விதிகளின் மசோதா ஒன்று போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் தொடர்ச்சியாக மூன்று பிரசுரங்களில் பிரசுரிக்கப்படவேண்டும்.

(2) அது - அந்தப்படி பிரசுரிக்கப்பட்ட பிறகு பிரதேச கவர்ன்மென்டாரால் அங்கீகரிக்கப்படுகிறவரையிலும் அப்படிப்பட்ட அங்கீகாரமும் போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசித்தம் செய்யப்பட்டாகிறவரையிலும் செலாவணியாகமாட்டாது.

(3) இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி பிரசுரிக்கப்பட்டிருக்கும் யாதொரு விதியை எந்தக் காலத்திலாகிலும் விளம்பரமூலமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் ரத்துசெய்வது சட்டசம்மதமாகும்."

73-வது பிரிவுக்கு பர்த்தியாக புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

26. பிரதான ஆக்ட் 73-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்:—

"73. பிரதேச அதிகாரிகள் கடன் வாங்குவதைக்குறித்த 1914-ம் வருஷத்து ஆக்டின்படி கடன் வாங்க போர்டாருக்குள்ள அதிகாரத்துக்கு இந்த ஆக்டில் கண்டதெதனாலும் பாதகம் உண்டாவதாக எண்ணக்கூடாது." [1914-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.]

88-வது பிரிவுக்கு பர்த்தியாக புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

27. பிரதான ஆக்ட் 88-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்:—

"88. போர்டார் நிர்ணயிக்கக்கூடிய நிர்ப்பந்தங்களுக்கு அல்லது திட்டங்களுக்கு உட்பட்டு, அக்கிராசனாதிபதியானவர் - யாதொரு ஒப்பந்தம் சொந்தத்தில் தமக்காகவே செய்துகொள்ளப்பட்டிருந்தால் எந்த மாதிரியாகவும் என்ன நமூனாப்படியும் செய்துகொள்ளப்பட்டிருக்குமோ அந்த மாதிரியாகவும் அந்த நமூனாப்படியும் போர்டாருக்காகவும் போர்டாரின் சார்பிலும் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்."

92-வது பிரிவில் திருத்தம்.

28. பிரதான ஆக்ட் 92-வது பிரிவில், 'தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற விசேஷ விதிகளையும் ரெகுலேஷன்களையும' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, 'விசேஷ விதிகளையும் ரெகுலேஷன்களையும்' என்னும் வார்த்தைகளையும், 'கட்டாயப்படுத்தவேண்டும்' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'கட்டாயப்படுத்தலாம்' என்னும் வார்த்தையையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

94-வது பிரிவில் திருத்தம்.

29. பிரதான ஆக்ட் 94-வது பிரிவில்,

(a) முதல் வாக்கியத்தில் 'நிர்ணயிக்கிற' என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக 'நிர்ணயிக்கக்கூடிய' என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(b) (4) குறிப்பிட்ட உட்பிரிவில் ‘தங்களுடைய வேலையைச் செய்துகொண்டிருக்கையில் கொல்லப்பட்ட’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக ‘போர்டாரிடத்தில் ஊழியம் செய்யும்போது மரணமடையக்கூடிய’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

98-வது பிரிவில் திருத்தம்.

30. (1) பிரதான ஆக்ட் 98-வது பிரிவில், ‘ஊழியங்கள் செய்யச் சித்தமாயிருக்கிறார்களோ’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக ‘ஊழியங்கள் செய்யவாவது ஊழியங்கள் செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யவாவது சித்தமாயிருக்கிறார்களோ’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும; மேலும், (2) ‘இங்க்லிஷ் - தெலுங்கு - தமிழ் - ஹிந்துஸ்தானி பாஷைகளில் அச்சிட்டு’ என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

3-வது ஷெட்யூலை விட்டுவிடுவது.

31. பிரதான ஆக்டின் 3-வது ஷெட்யூலை விட்டுவிடவேண்டும்.

38-வது பிரிவில் திருத்தம்.

32. (1) பிரதான ஆக்ட் 38-வது பிரிவில், ‘பிரதேச அதிகாரிகள் கடன் வாங்குவதைக்குறித்த 1879-ம்௵த்திய ஆக்டில்’ என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கத்துக்கும் பாத்தியாக ‘பிரதேச அதிகாரிகள் கடன் வாங்குவதைக்குறித்த 1914-ம்௵த்திய ஆக்டில்’ என்னும் வார்த்தைகளையும் இலக்கத்தையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(2) பிரதான ஆக்ட் 44-வது பிரிவில்,—

44-வது பிரிவில் திருத்தம்.

(a) (1) குறிப்பிட்ட உட்பிரிவில், ‘43-வது பிரிவின்படியாவது’ என்னும் வார்த்தைக்கும் இலக்கத்துக்கும் பிறகு, ‘43-A பிரிவின்படியாவது’ என்னும் வார்த்தையையும் இலக்கத்தையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) (3) குறிப்பிட்ட உட்பிரிவில், ‘42-வது அல்லது 43-வது பிரிவினால்’ என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கங்களுக்கும் பர்த்தியாக, ‘42-வது பிரிவு, 43-வது பிரிவு அல்லது 43-A பிரிவினால்’ என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

46-வது பிரிவில் திருத்தம்.

(3) பிரதான ஆக்ட் 46-வது பிரிவில், ‘43-வது பிரிவின்படியாவது’ என்னும் வார்த்தைக்கும் இலக்கத்துக்கும் பிறகு ‘43-A பிரிவின்படியாவது’ என்னும் வார்த்தைகளையும் இலக்கத்தையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

49, 91, 95, 111-வது பிரிவுகளில் திருத்தம்.

(4) பிரதான ஆக்ட் 49, 91, 95, 111-வது பிரிவுகளில் 1889 - ம்௵த்திய இந்து தேசத்து ரேவு ஆக்ட்’ என்று பொருள்படும் வார்த்தைகளுக்கும் இலக்கத்துக்கும் பர்த்தியாக, ‘1908-ம் ௵த்திய இந்து தேசத்து ரேவு ஆக்ட்’ என்று பொருள்படும் வார்த்தைகளையும் இலக்கத்தையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

100-வது பிரிவில் திருத்தம்.

(5) பிரதான ஆக்ட் 100-வது பிரிவில், ‘7-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த விலக்கான நிபந்தனையின்படி’ என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கங்களுக்கும் பாத்தியாக ‘10-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (e) அடையாளமிட்ட பகுதியின்படி’ என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

இப்போதிருக்கும் ட்ரஸ்டிகளின் உத்தியோக கால அளவு.

33. இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்குவதன்மேல், அக்கிராசனாதிபதியல்லாமல் அப்போது உத்தியோகம் வகித்துக்கொண்டிருக்கும் மற்ற ட்ரஸ்டிகளின் உத்தியோக கால அளவானது பிரதேச கவர்ன்மெண்டார் நிச்சயிக்கும் தேதி அல்லது தேதிகளில் முடிவாய்விடும்; மேலும், புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டும் நியமிக்கப்பட்டுமுள்ள ட்ரஸ்டிகள் முந்தியிருந்த ட்ரஸ்டிகள் உத்தியோகத்தைவிட்டு நீங்குவதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதி அல்லது தேதிகளில் உத்தியோகம் வகிக்கத்தொடங்கக்கூடியபடி 8-வது பிரிவின் பிரகாரம் நேமகங்கள் செய்யவேண்டியதுமல்லாமல் எலெக்ஷன்கள் நடத்த ஏற்பாடுகள் செய்விக்கவும் வேண்டும்.

பி. எல். மூர்,
கவர்ன்மெண்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.